IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.
RLTOP. No. 06/2023

**P.W.1**

| | |
|---|---|
| Name | : புகழேந்தி |
| Father/Husband Name | : சுப்ரமணி |
| Place | : |
| Calling | : |
| Religion | : |
| Age | :54 |
| Date | :18-07-2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.07.2025.

சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி –**

1. நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவேன். 31/03/2017 தேதியிட்ட கடை வாடகை ஒப்பந்த ஆவண நகல் கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனை பேரில் (நகல் என்பதால் குறியீடுசெய்யகூடாது என்று ஆட்சேபனை செய்யப்பட்டது) ம.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 05/02/2020 மற்றும் 12/04/2019 தேதியிட்ட என் பெயரில் உள்ள சொத்து வரி ரசீதுகள் ம.சா.ஆ.2 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. என் பெயரில் உள்ள மின் கட்டண அட்டை ம.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 01/06/2018, 24/09/2018 மற்றும 15/06/2019 தேதியிட்ட திருப்போரூர் காவல் நிலையத்தில் நான் எழுதி கொடுத்த கடித நகல்கள் ம.சா.ஆ. 4 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. ( மேற்கண்ட ஆவணங்கள் நகல்கள் என்பதால் கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனை பேரில் குறியீடு செய்யப்படுகிறது)

2. 28/12/2019 தேதியிட்ட நான் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய கடித நகல் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22/02/2020 தேதியிட்ட நானும் எதிர்மனுதாரரும் எழுதிக்கொண்ட சம்மத கடித நகல் ம.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07/08/2020 தேதியிட்ட திருப்போரூர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் எழுதிக்கொடுத்த வாக்குமூல நகல் ம.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.( மேற்கண்ட ம.சா.ஆ 5 முதல் ம.சா.ஆ. 7 ஆவணங்கள் நகல் என்பதால் கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனை பேரில் குறியீடு செய்யப்படுகிறது)

3. 05/09/2022 தேதியிட்ட நான் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய கடித நகல் மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டை ம.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13/10/2022 தேதியிட்ட நான் செங்கல்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய கடித நகல் மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டை ம.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுவின் படி தீர்ப்பாக பிராத்திகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

வேண்டுகோளின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

S/d- K.Nilavarasan, 18.07.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.